# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

------------

## II ADDITIONAL DISTRICT AND SESSIONS JUDGE, SALEM.

**Sessions Case No.19/2024**

Deposition of witness for : PW-4

Name : செல்வகுமார்

Father's / Husband Name : நாராயணன்

Village : பச்சபட்டி, அசோக்நகர்

Taluk :

Calling :

Age : 40

Solemnly affirmed in accordance with the provisions of Law by Thiru.R.Ashok Raj Nirmal Reddy, Superintendent of this court on the day of 18.03.2026 Evidence Recorded from 01.15 p.m. to 01.25 p.m.

**1 ம் எதிரி ஆஜர்படுத்தப்பட்டார், 4, 5 மற்றும் 7–ம் எதிரிகள் ஆஜரில்லை – குவிமுச பிரிவு 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. 2, 3, 6, 8 எதிரிகள் ஆஜர்.**

**முதல் விசாரணை.**

நான் சம்பவத்தின் போது காளிதாசன் தெரு, கிச்சிபாளையம் சேலத்தில் குடியிருந்து வந்தேன். தற்போது அசோக் நகர் பச்சபட்டி, கிச்சிபாளையத்தில் குடியிருந்து வருகிறேன. நான் கட்டிட மேஸ்திரியாக

வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியாது. ஆஜரில் இல்லாத மாதவன், இளையராஜா, சண்முகம் ஆகியோர்களையும் தெரியாது. அசா.1 சந்திரசேகரையும் தெரியாது. இவ்வழக்கு சம்பந்தமாக எனக்கு ஒன்றும் தெரியாது. சம்பவத்தை நான் நேரடியாக எதுவும் பார்க்கவில்லை. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

கற்றறிந்த அரசு தரப்பு வழக்கறிஞர் சாட்சி குவிமுச 161 (3) ன் படியான வாக்குமூலத்திற்கு எதிராக சாட்சியம் அளித்துள்ளார். பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்க வேண்டினார். சாட்சி பிறழ் சாட்சியாக கருதப்பட்டு சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறார்.

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை.**

நான் போலிஸ் விசாரணையில் கடந்த 07.09.2023 ம் தேதி மாலை 07.30 மணியளவில் விக்னேஷ் ஓட்ட பின்னாடி ஓவியா ஜுவல்லர்சில் வேலை செய்யும் சந்திரசேகர் என்பவரை உட்கார வைத்து அவரை மாதவன் பிடித்து கொண்டு TN 54 E 7756 என்ற வாகனத்திலும், மற்றொரு இருசக்கர வாகனத்தில் விமல்குமார் மற்றும் இளையராஜா ஆகியோர்கள் குறிஞ்சி ஹவுசிங் போர்டு அருகில் உள்ள பன்னி மாரியப்பன் ஓட்டு வீட்டிற்கு அழைத்து சென்றார்கள் என்றும், கொஞ்ச நேரத்தில் குட்டியப்பன், சண்முகி, கோபி மூன்று பேரும் அங்கு வந்தார்கள் என்றும், பிறகு அங்கிருந்து அய்யோ அம்மா என்று சத்தம் கேட்டது என்றும், பிறகு அங்கிருந்து பன்னி மாரியப்பனும், விமல்குமாரும் வெளியே வந்து பார்த்துவிட்டு மீண்டும் சென்றார்கள் என்றும் பிறகு மாதவன் இருசக்கர வாகனத்தை எடுத்து சென்று விட்டு கொஞ்ச நேரம் கழித்து மீண்டும்

அங்கு வந்தார் என்றும் பிறகு இரவு 09.00 மணியளவில் சந்திரசேகரை விக்னேஸ் இருசக்கர வாகனத்தில் உட்கார வைத்தும் மாதவன், விமல்குமார், இளையராஜா, பன்னி மாரியப்பன், குட்டியப்பன், கோபி, சண்முகி ஆகியோர் இருசக்கர வாகனத்தில் போனார்கள் என்றும், அதனை நான் நேரில் பார்த்தேன் என்றும் கூறிவிட்டு தற்போது எதிரிகளுக்கு சாதகமாக பொய் சாட்சியம் அளிக்கின்றேன் என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை (எதிரிகள் தரப்பில்)**

அனைத்து எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லையென்று எடுத்துரைக்கப்பட்டது.

**மறுவிசாரணை.** இல்லை.

ஒம்/– S. எழில் வேலவன்,
இரண்டாவது கூடுதல் மாவட்ட நீதிபதி,
சேலம்.

**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal Procedure)
------------
**II ADDITIONAL DISTRICT AND SESSIONS JUDGE, SALEM.**

**Sessions Case No.19/2024**

| | |
|---|---|
| Deposition of witness for | : PW-5 |
| Name | : கேசவன் |
| Father's / Husband Name | : ரமேஸ் |
| Village | : கிச்சிபாளையம் |
| Taluk | : |
| Calling | : |
| Age | : 25 |

Solemnly affirmed in accordance with the provisions of Law by Thiru.R.Ashok Raj Nirmal Reddy, Superintendent of this court on the day of 18.03.2026 Evidence Recorded from 01.26 p.m. to 01.30 p.m.

**1 ம் எதிரி ஆஜர்படுத்தப்பட்டார். 4, 5 மற்றும் 7–ம் எதிரிகள் ஆஜரில்லை – குவிமுச பிரிவு 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. 2, 3, 6, 8 எதிரிகள் ஆஜர்.**

**முதல் விசாரணை.**

நான் காந்தி மகான் தெரு, கிச்சிபாளையத்தில் குடியிருந்து வருகிறேன. நான் வரலட்சுமி கம்பெனியில் வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியாது. ஆஜரில் இல்லாத மாதவன்,

இளையராஜா, சண்முகம் ஆகியோர்களையும் தெரியாது. அசா.1 சந்திரசேகரையும் தெரியாது. இவ்வழக்கு சம்பந்தமாக எனக்கு ஒன்றும் தெரியாது. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

கற்றறிந்த அரசு தரப்பு வழக்கறிஞர் சாட்சி குவிமுச 161 (3) ன் படியான வாக்குமூலத்திற்கு எதிராக சாட்சியம் அளித்துள்ளார். பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்க வேண்டினார். சாட்சி பிறழ் சாட்சியாக கருதப்பட்டு சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறார்.

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை.**

நான் போலிஸ் விசாரணையில் கடந்த 07.09.2023 ம் தேதி மாலை 07.30 மணியளவில் விக்னேஷ் ஓட்ட பின்னாடி ஓவியா ஜுவல்லர்சில் வேலை செய்யும் சந்திரசேகர் என்பவரை உட்கார வைத்து அவரை மாதவன் பிடித்து கொண்டு TN 54 E 7756 என்ற வாகனத்திலும், மற்றொரு இருசக்கர வாகனத்தில் விமல்குமார் மற்றும் இளையராஜா ஆகியோர்கள் குறிஞ்சி ஹவுசிங் போர்டு அருகில் உள்ள பன்னி மாரியப்பன் ஓட்டு வீட்டிற்கு அழைத்து சென்றார்கள் என்றும் கொஞ்ச நேரத்தில் குட்டியப்பன், சண்முகி, கோபி மூன்று பேரும் அங்கு வந்தார்கள் என்றும், பிறகு அங்கிருந்து அய்யோ அம்மா என்று சத்தம் கேட்டது என்றும், பிறகு அங்கிருந்து பன்னி மாரியப்பனும், விமல்குமாரும் வெளியே வந்து பார்த்துவிட்டு மீண்டும் சென்றார்கள் என்றும் பிறகு மாதவன் இருசக்கர வாகனத்தை எடுத்து சென்று விட்டு கொஞ்ச நேரம் கழித்து மீண்டும் அங்கு வந்தார் என்றும் பிறகு இரவு 09.00 மணியளவில் சந்திரசேகரை விக்னேஸ் இருசக்கர வாகனத்தில் உட்கார வைத்தும் மாதவன்,

விமல்குமார், இளையராஜா, பன்னி மாரியப்பன், குட்டியப்பன், கோபி, சண்முகி ஆகியோர் இருசக்கர வாகனத்தில் போனார்கள் என்றும், அதனை நான் நேரில் பார்த்தேன் என்றும் கூறிவிட்டு தற்போது எதிரிகளுக்கு சாதகமாக பொய் சாட்சியம் அளிக்கின்றேன் என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை (எதிரிகள் தரப்பில்)**

அனைத்து எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லையென்று எடுத்துரைக்கப்பட்டது.

**மறுவிசாரணை.** இல்லை.

ஒம்/– S. எழில் வேலவன்,
இரண்டாவது கூடுதல் மாவட்ட நீதிபதி,
சேலம்.